Dated : 17.08.2021
SPL.SC 31/2019
PW 102 Tr.Stalin
சாட்சி ஆஜர்.

சாட்சி எதிரிகள் தரப்பில் மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில்

**கூடுதல் குறுக்கு விசாரணை :**

சிபிசிஐடி பிரிவில் சைபர் கிரைம் கிளை உள்ளது. பொதுவாக தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் செய்திகளை இடைமறித்து பதிவுசெய்யும் வசதி எங்கள் சைபர் கிரைமில் உள்ளது என்றால் இல்லை. பொதுவாக தேடப்படும் குற்றவாளி ஒருவர் தொலைபேசியில் பேசினோலோ, வாட்ஸ்அப்பில் பேசினோலோ, பேஸ்புக்கில் பேசினோலோ, அவற்றை எங்கியிருந்து பேசியிருக்கிறார் என்பதை கண்டுபிடிக்கமுடியுமா என்றால் தொலைபேசி அழைப்புக்களை பொறுத்தவரை கண்டுபிடிக்கமுடியும். வாட்ஸ்அப், பேஸ்புக் அழைப்புக்களை பொறுத்தவரை அவற்றிற்கான ஆவணங்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். இவ்வழக்கின் 1ம்எதிரி யுவராஜியிடம் புதிய தலைமுறை தொலைக்காட்சி நிறுவனத்தினரால் ஒரு நேர்க்காணல் நடத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு நேர்க்காணல் நடத்தப்பட்ட விபரம் எனக்கு என்று தெரியவந்தது என்று ஞாபகமில்லை. சாட்சி விஜயகுமாரை 26.12.2015 அன்று விசாரித்து அவரது வாக்குமூலத்தை பதிவுசெய்தேன். 1ம் எதிரி யுவராஜ் புதியதலைமுறை தொலைக்காட்சி நடத்தும் நேர்படபேசு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விபரம் எனது புலன் விசாரணை முடியும்வரை எனக்கு தெரியாது. ஆனால் தற்போது ஏப்ரல் 2021 ல் தெரிந்து கொண்டேன். புதிய தலைமுறை செய்தியாளர் விஜயகுமார் யுவராஜை நேர்காணல் நடத்திய விபரம் அவரை விசாரித்த பின்னர் தான் தெரியும் என்றால் அதற்கு முன்னரே தெரியும். அவரை விசாரிப்பதற்கு எவ்வளவு நாட்களுக்கு முன்பு மேற்படி நேர்காணல் பற்றி எனக்கு தெரியும் என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. மேற்படி விஜயகுமார் 1ம்எதிரி யுவராஜை நேர்காணல் செய்த வீடியோவை நான் பார்த்தேன். அந்த வீடியோவை 1ம்எதிரி யுவராஜை கைது செய்வதற்கு முன்பு பார்த்தேனா அல்லது பின்பு பார்த்தேனா என்று எனக்கு தற்போது ஞாபகமில்லை. மேற்படி விஜயகுமார் அலுவலகத்திற்கு நான் இவ்வழக்கு விசாரணை சம்பந்தமாக சென்றதில்லை. புதியதலைமுறை தொலைக்காட்சியில் திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் மலைக்கோயிலிலுள்ள சிசிடிவி பதிவுகளை ஒளிபரப்பிய விபரம் எனக்கு தெரியும். அந்த சிசிடிவி பதிவுகள் புதிய தலைமுறை தொலைக்காட்சிக்கு எவ்வாறு, எப்போது, என்று கிடைத்தது என்ற விபரம் நான் கேள்விப்படவில்லை. மேற்படி சிசிடிவி சம்பந்தப்பட்ட வன்தட்டு (Hard disk) 28.06.2015 அன்று இறந்து போன டி.எஸ்.பி விஷ்ணு ப்ரியா கைப்பற்றியுள்ளார்கள். நான் சொன்னது போல் டி.எஸ்.பி விஷ்ணு ப்ரியா அவர்கள் மேற்படி சிசிடிவி சம்பந்தப்பட்ட வன்தட்டு (Hard disk) யை கைப்பற்றவில்லை என்றாலும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வன்தட்டு அதற்கு முன்பே புதியதலைமுறை தொலைக்காட்சி தொழில்நுட்பர்களை வைத்து பொய்யாக தயார் செய்யப்பட்டு அதை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.21 தங்கவேலு எனது விசாரணையில் "இந்த கம்போர்டு

UTL MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

சாவியை வைத்திருந்ததாகவும், அவர்கள் முன்னிலையில் காவல்துறையினர் Technician மூலமாக சான்று பொருளை கைப்பற்றி சென்றார்கள்" என்று எனது விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.76 கதிரேசன் எனது விசாரணையில் "கோகுல்ராஜ் வீடு அருகிலிருந்த லதா என்ற பெண்ணும் எங்கள் காலேஜில் MCA படித்து வந்தார் என்றும், அவரும் நான் செல்லும் காலேஜ் பஸ்ஸில் தான் வந்து செல்வார் என்றும், லதாவிடமும் கோகுல்ராஜ் சகஜமாக பேசுவார் என்றும் இருவரும் நண்பர்கள் என்றும்" எனது விசாரணையில் கூறியுள்ளார் என்றால் சரிதான். எனது விசாரணையில் சாட்சி சுவாதியை தெரியும் என்றோ, சுவாதியின் பெயரையோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. 3 ஸ்டார் போட்ட வாகனம் ADGP மற்றும் DGP க்கு ஒதுக்கப்பட்ட அரசு வாகனமாகும்.

**அரசுத்தரப்பில் மறுவிசாரணை (அனுமதியுடன்)**

சாட்சி புதியதலைமுறை செய்தியாளர் விஜயகுமார் யுவராஜின் நேர்காணலை தனியாக பதிவுசெய்து பின்னர் அது தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்யப்பட்டுள்ளது.

**எதிரிகள் தரப்பில் கூடுதல் குறுக்கு விசாரணை**

புதியதலைமுறை செய்தியாளர் விஜயகுமார் மற்றும் புதியதலைமுறை பதிவுகள் 1ம்எதிரியை ADGP பாதுகாப்பில் வைத்து பொய்யாக தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. (மேற்படி கேள்விக்கு அரசுத்தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டது).

UTL MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com